அசல் வழக்கு எண்.188/2021 வா.சா.3 முருகன் த/பெ மீனாட்சிசுந்தரம்

**<u>03.09.2024 குறுக்கு விசாரணை</u>**

1. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு வெற்று கடனுறுதிச்சீட்டில் பூர்த்தி செய்து கையெழுத்து செய்யப்பட்ட ஆவணம் ஆகும். வா.சா.ஆ1 கடனுறுதிச்சீட்டு பிரதிவாதியே எழுதி எடுத்து வந்தாரா அல்லது வாதியோ அல்லது நானோ எழுதினேனா என்றால் நான்தான் எழுதினேன். வா.சா.ஆ.1 ரகு வீட்டில் எழுதப்பட்டது. நான் கடனுறுதிச்சீட்டு எழுதிகையெழுத்து போட்டது பிரதிவாதிக்கு தெரியும் என்ற சொல்லி உள்ளேன் என்றும் அது நான் சொல்லி தெரியுமா அல்லது பிரதிவாதிக்கே தெரியுமா என்றால் பிரதிவாதிக்கே தெரியும்.

2.நான் இருக்கும் இடத்திற்கும் வாதி இருக்கும் இடத்திற்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் 2 கி.மீ இடைவெளி இருக்கும். பிரதிவாதி தனது குடும்ப செலவிற்காக கடன் பெற்றதாக சொல்லி உள்ளேன் என்றும் பிரதிவாதியின் குடும்பத்தினர் யாராவது கடனுறுதிச் சீட்டில் கையெழுத்து செய்தார்களா என்றால் இல்லை.

3. கடனுறுதிச்சீட்டில் வீடுகட்டுவதற்காக கடன் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் அந்த வீடு எந்த அளவில் கட்டப்பட்டு இருந்தது என்றுதெரிந்து கொண்டேனா என்றால்இல்லை. பிரதிவாதி முன்னர் பெற்ற கடனை அடைப்பதற்கு வாதியிடம் கடன் பெற்றதாக சொல்லி உள்ளேன் என்றும் அவ்வாறு பிரதிவாதி கடன் பெற்ற நபர்களின்பெயர்களை கடனுறுதிச் சீட்டில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

4.பிரதிவாதி வட்டியை செலுத்திவிட்டதாக சொல்லியிருப்பது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கணவர் கையெழுத்து செய்தாரா என்றால் பிரதிவாதி விதவை ஆவார். கடன் தொகைக்கு 2 சதவீத வட்டி எழுதப்பட்டது. நான் கடனுறுதிச்சீட்டு எழுத சென்றபோதே சாட்சிகள் அங்கு இருந்தார்கள்.

5. வாதி ஸ்ரீராம் நகரில் புதிய வீடு கட்டி அங்கு குடும்பம் இருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. நான்என் அடையாள அட்டை எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் வாதியிடம் வேலை செய்து வருகிறேன் என்றும் அதற்காக பவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பத்திரம் எழுதுபவர் அதனால் வந்துள்ளேன்.